# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க,

# மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஜூலை மாதம் 6 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990 ஜூலை மாதம் 6 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்

[1990 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ.ஓ—20/89
2010

## 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் 'அத்தகைய நிதியாண்டு முடிவுறுவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து மாதங்களுக்கு முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர்" என்னும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. பின்வரும் பிரிவு, பிரிவு 27 என்பதனை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 27 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"ஆளுநரின் தத்துவங்கள்.

27. மாகாண சபையொன்று நிதியாண்டுக்கான வருடாந்த நிதிக்கூற்று அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னராகக் கலைக்கப்படுமிடத்து, அல்லது ஒரு மாகாண சபை வேறு ஏதேனும் காரணத்துக்காக பணியாற்றாது ஒழியுமிடத்து, ஆளுநர் ஆனவர், இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், புதிய மாகாண சபை எத்தேதியன்று கூடுவதற்கு அழைக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து அல்லது எத்தேதியன்று மாகாணசபை மீளவும் செயற்படத் தொடங்குகிறதோ அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதி முடிவடையும் வரையில், மாகாணத்தின் நிருவாகத்துக்கு அவசியமென அவர் கருதக் கூடியவாறான அத்தகைய நிதிகளை மாகாண நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் அந்நிதியத்தின் செலவினத்துக்கும் அதிகாரமளிக்கலாம்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2அ) ஒரு மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவானது, அம்மாகாணத்தின் ஆளுநரால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக மாகாணப் பகிரங்க சேவை அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகிய தத்துவங்களை, அம்மாகாணத்தின் பகிரங்க சேவையின் பிரதான செயலாளருக்கு அல்லது அதன் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2ஆ) மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவை பிரதான செயலாளரினால் ஆக்கப்பட்ட அல்லது அதன் எந்த அலுவலருக்கு அம்மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவானது முற்போந்த உட்பிரிவின் கீழ் அதன் தத்துவங்களைக் கையளிக்கின்றதோ, அந்த அலுவலரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையினால் பாதிக்கப்படும் மாகாணத்திலுள்ள மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர், அத்தகைய மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் "அம்மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேன்முறையீட்டின் மீது அல்லது வேறுவிதமாக அம்மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு, அல்லது அம்மாகணத்தின் மாகாணப் பகிரங்க சேவையின் பிரதான செயலாளர் அல்லது எந்த எவரேனும் அலுவலருக்கு 32 ஆம் பிரிவின் கீழ் அதன் தத்துவங்களை அத்தகைய மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு கையளித்திருக்கின்றதோ, அந்த எவரேனும் ஆள்" என்னும் சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு "ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவின் மீது அல்லது அதன் எவரேனும் உறுப்பினர் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவின் மீது அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் மீது அல்லது பிரதான செயலாளரின் மீது அல்லது அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் எவரேனும் மாகாணப் பகிரங்க சேவை அலுவலர் மீது' என்னும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள வாசகம் மேலோங்கி நிற்றல்.*

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா [illegible]27 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.